# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# வெற்றிடங்கள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச மருத்துவமனைகளுக்காக மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களின் ஏக இறக்குமதியாளராகவும் இலங்கையில் உள்ள தனியார் துறைக்கான மருந்துகளின் முன்னணி இறக்குமதியாளர் மற்றும் விநியோஸ்தராகவும் உள்ளது.

## பொது முகாமையாளர் HM 2.1 – தலைமை செயற்பாட்டு அதிகாரி (வெற்றிடம் 01)

**தகைமைகள்:**

**(கீழுள்ள 1 அல்லது 2)**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், வர்த்தக நிர்வாகம், வணிக துறையில் இளமாணி பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் ஏதேனும் ஒரு பட்டம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்ட தகைமை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவம்.

**மற்றும்**

முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம்/ சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 18 (பதினெட்டு) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் அதில் 3 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமையாளர் தரத்தில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், வர்த்தக நிர்வாகம், வணிக துறையில் இளமாணி பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் ஏதேனும் ஒரு பட்டம்.

**மற்றும்**

2. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு தொடர்புடைய துறையிலும் கலாநிதிப் பட்டம்

**மற்றும்**

முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/நிறுவனம்/சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 3 (மூன்று) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 114,560/- ,3,375/- x 12 – 155,060/-
(தோராயமாக மாதாந்த ஊதியம் சுமார் ரூபா 215,000/-)

**வயது வரம்பு** : 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**அனைத்து விண்ணப்பதாரரும்:**

`` I. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. பதவிக்கான பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

III. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் அபேட்சகர்கள் மாதாந்த வருகை கொடுப்பனவு, பயன்படுத்தப்படாத விடுப்புகளை பணமாக்கல், வருடாந்த மிகையூதியம், நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்காக ஊழியர் மற்றும் குடும்பத்திற்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் மற்றும் அரச சுற்றுநிருபத்திற்கு அமைய மாதாந்த எரிபொருள் கொடுப்பனவுடன் உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கு கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் ஒன்று உட்பட கவர்ச்சிகரமான அளவில் நலம்சார் கொடுப்பனவுகளுக்கு உரித்தாவார்கள்.

சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத இரு நடுவர்களின் பெயர் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதைய பதவி நிலை, சம்பளப் புள்ளி மற்றும் அளவு, முன்னர் வகித்த பதவி நிலை, முந்தைய தொழில் வழங்குநரிடம் இணைந்த மற்றும் விலகிய திகதி உட்பட முழுமையான சுயவிபரக் கோவையைக் கொண்டதாக விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும்.

குறித்த சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கருத்தில் கொள்ளவும்.

அரச சேவை/அரச கூட்டுத்தாபனம்/சட்டரீதியான சபையில் பணியாற்றுபவர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை கொண்ட கடித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும் என்பதோடு 2025.09.29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**முகாமைத்துவ பணிப்பாளர்**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்**
**“மெஹவர பியச”**
**16ஆவது மாடி, 41, கிருள வீதி,**
**கொழும்பு 05.**
**தொ.: 011 2320356/9**